DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| OS.No. | : | 75/2016 |
| Deposition of Witness for | : | P.W.5 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சுலைகாபீவி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.01.2026

**முதல் விசாரணை:**

நான் வாதி தரப்பில் 5 வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் வீட்டில் இருக்கிறேன். வாதி தேவியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் கடந்த 10 வருடங்களாக தெரியும், அவர் எனக்கு நல்ல பழக்கமா என்றால் நல்ல பழக்கம். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, எனது மகன் எனக்கு நிரூபணவாக்குமூலத்தை படித்து காண்பித்தார். அதில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றும் நான் படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்திற்குக்கான விவரங்கள் யார் கூறினார் என்றால் எனது

மகன் கூறினார். நிருபணவாக்குமூலத்திற்கான விவரங்களை எனது மகன் கூறினார் என்றும் அதனை அவர் படித்து காண்பித்து நான் விவரம் கூறியதாக நிருபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2.நான் 24.04.2023 ல் ஒத்திக்கு சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அந்த ஒத்தி பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது வீட்டில் உள்ளது. மீண்டும் 17.11.2025 ல் ஒத்திப்பத்திரம் ஏற்படுத்திபட்டுள்ளது என்றும் அதனையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, இனிமேல் தான் போடப்போகிறோம். ஒத்திக்கு போகும் முன்பு இந்த சொத்து யாருக்கு பாத்தியம் என்று ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், அது வீட்டு வரி ஆகும். வீட்டு வரி இந்த பிரதிவாதியான நாராயணன் பெயரில் இருந்ததா என்றால் இல்லை தேவியம்மாள் பெயரில் இருந்தது. தேவியம்மாள் பெயரில் வீட்டு வரி இல்லை என்றும் நாராயணன் பெயரில் தான் வீட்டு வரி இருந்தது என்று சொன்னால் சரியல்ல. இந்த வீட்டு வரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வீட்டுவரி மற்றும் எந்த ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை என்றும் இந்த வழக்கிற்காக தேவி எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வீட்டின் பத்திரம் யார் பெயரில் உள்ள என்று பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை.

3. நான் தாவா சொத்தில் ஒத்திக்குபோனதற்கு சம்பந்தமாக நான் எந்த ஒரு ஆவணமும் பார்க்கவில்லை என்றும் பார்த்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை அடமானம் வைத்து வாதி தேவி பிரதிவாதி நாராயணன் என்ற அழகப்பனிடம் 08.02.2010 ல் ரூ.7 லட்சம் அடமானமாக வைத்து கடன் வாங்கினார் என்றால் அதுகுறித்து தேவி என்னிடம் சொல்லியுள்ளார். அது பதிவுத்துறை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அடமானம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 15.04.2013 ல் மேலும் ரூ.23 லட்சம் வாங்கிக்கொண்டு தாவா சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் வாங்கிக்கொடுத்தார் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பத்திரம் தெரியாமல் யாருக்கு சொந்தமான ஆவணங்களை பார்க்காமல் நான் ஒத்திக்கு சென்றோமா என்றால் பத்திரம் எதுவும் பார்க்கவில்லை வீட்டு வரி பார்த்து ஒத்திக்கு சென்றோம். தேவி சொன்னதன் பேரில் ஒத்திக்கு சென்றோமா என்றால் வீடு அவருக்கு

சொந்தமானது என்று கூறி வரி ரசீதை காண்பித்ததன் அடிப்படையில் நாங்கள் ஒத்திக்கு சென்றோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் நான் ஒத்திக்கு போனதாக சொல்லும் காலத்தில் அந்த வீட்டின் வீட்டு வரியோ, மின் இணைப்போ, தண்ணீர் வரியோ 1ம் பிரதிவாதிதான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல தேவியம்மா பெயரில் தான் உள்ளது நான் தான் வரி கட்டி வருகிறேன். தேவியம்மாள் பெயரில் ஆன சொத்துவரி ரசீதோ, தண்ணீர் வரி ரசீதோ, மின் இணைப்பு ரசீதோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதை நான் அடுத்து முறை நீதிமன்றத்திற்கு வரும்போது எடுத்துவருகிறேன். நான் ஒத்திக்கு செல்லும் காலத்தில் தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என வில்லங்கச் சான்று யார் பெயரில் உள்ளது என பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்கச் சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அப்படி வில்லங்கச் சான்று நான் பார்த்தேன் என்றால் தேவி 15.04.2013ல் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வில்லங்கச் சான்றிதழை பார்த்திருந்தால் அதில் 1ம் பிரதிவாதி பெயர் இடம் பெற்றிருந்திருக்கும் என சொன்னால் அது தேவியம்மாள் பெயரில் தான் இருந்தது. நான் எந்த தேதியில் வில்லங்கச் சான்று போட்டுப்பார்த்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. தாவா சொத்து தேதியம்மாள் பெயரில் இல்லை என்றும் அவர் பெயரில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் வசித்து வருவதற்கான எந்த ஒரு ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அடுத்த முறை நீதிமன்றத்திற்கு வரும் போது எடுத்து வருகிறேன். தாவா சொத்தின் மூலப்பத்திரம், வரி ரசீதுகள், தேவி கொடுத்த கிரையப்பத்திரம் 1ம் பிரதிவாதி நாராயணனிடம் தான் உள்ளது என்றால் இல்லை அது தேவியம்மாளிடம் உள்ளது. தாவா சொத்தை பொறுத்து தேவி 1ம் பிரதிவாதி நாராயணனுக்கு கிரையம் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரிந்த அளவுக்கு சொல்லியுள்ளேன். என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. தாவா சொத்திற்கு ஒத்திக்குபோவதாக தேவிக்கு ரூ.3 1/2 லட்சம் கொடுத்தற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்யவில்லை. எனக்கு நீதிமனற்த்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் வரவில்லை நான் தான் தேவியம்மாள் சொன்னதன் பேரில் வழக்கறிஞர் வரசொல்லி வந்தேன். நான் ஒத்திக்குபோவதாக சொல்லும் தாவா சொத்து தேவிக்கு பாத்தியம் இல்லை என்றும் தேவி என்னை மோசடி செய்துள்ளார் என்று நான் காவல் துறைக்கு சென்று புகார் அளிக்க தயாரா என்றால் இல்லை. தேவி தாவா சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு சொத்தினை காலி செய்யாமல் தற்போது தாவா சொத்து தனக்கு சொந்தம் என குறிப்பிட்டு பொய் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1ம் பிரதிவாதியை தேவி மோசடி செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. தாவா சொத்தும் 2ம் பிரதிவாதியான மெய்யம்மைக்கு அவரது கணவரான இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி நாராயணனுக்கு இனாம் செட்டில் மெண்ட்கொடுத்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்துக்கு உரிய நபரிடம் நான் எதுவும் தொகை கொடுக்கவில்லை என்றும் ஒத்திக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் ஒத்திக்கும் போகவில்லை என்றும் அதற்கான பணமும் கொடுக்கவில்லை என்றும் தேவி எனக்கு தெரிந்தவர் என்ற அடிப்படையில் அவர் செய்த மோசடிக்கு துணைபோக வேண்டும் என்ற அடிப்படையில் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.